தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை.

1984 மார்ச் 23, வெள்ளிக்கிழமை.

பங்குனி 10, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்
இன்னான் எனப்படுஞ் சொல் ".

மக்களுக்கு இயற்கை அறிவு மனத்தால் ஏற்படும். ஆனால் இப்படிப்பட்டவன் என்று உலகத்தாரால் மதிக்கப்படும் சொல், அவன் சேர்ந்துள்ள இனத்தால் ஏற்படும்.

1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மின் நிலையங்களைக் கண்காணிக்க குழு அமைக்கும் திட்டம்.

407—(*வினா எண் 20187)—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் நிலையங்களைக் கண்காணிக்கக் குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் நாட்டில் அதிகமான அளவிற்கு அனல் மின் நிலயங்கள் புனல் மின் நிலையங்கள் இருக்கின்றன. ஆகவே அடிக்கடி பாதிப்பு ஏற்பட்டு, பெரிய அளவிலே மாற்றம் இருக்கின்றது. ஆகவே அவற்றைக் கண்காணிப்பதற்கு ஒரு குழு அமைத்தால் அப்படிப்பட்ட பாதிப்பு ஏற்படாமல் எதிர்காலத்தில் நன்மைகள் ஏற்படும். எனவே அரசு அதை மறுபரிசீலனை செய்ய அப்படிப்பட்ட கண்காணிப்பு, குழுக்களை அமைக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கண்காணிப்புக் குழு என்று ஒன்றும் இல்லை. ஆனால் அதே நேரத்தில் மத்திய-மாநில அரசுகளின் மின் உற்பத்தி நிலையங்களைச் சேர்ந்த அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று என் தலைமையில் இயங்கிவருகின்றது. மூன்று மாதத்திற்கு ஒருமுறை நாங்கள் கூடி மின் உற்பத்தி எவ்வாறு உள்ளது, மின் உற்பத்தியை எவ்வாறு அதிகரிக்கலாம், வருங்கால மின் தேவைகளை எவ்வாறு சமாளிப்பது போன்ற விவரங்களையும், மின் உற்பத்திக்கான திட்டங்கள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்று அதாவது ''ஆன்—கோயிங் ஸ்கீம்'' (On - going Schemes) பற்றி பரிசீலனை செய்கின்றோம்.

மின் இணைப்புக் கொடுப்பதில் சிறு விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கும் திட்டம்.

408—(*வினா எண் 20535)—திரு. செ. செம்மலை : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் இணைப்புக் கொடுப்பதில் சிறு விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியம் பாசன கிணறுகளுக்கு மின் இணைப்பைக் கொடுப்பதில் ஆண்டுக்கு ஒரு குறியீட்டை வைத்து, இவ்வளவு கிணறுகளுக்கு நாங்கள் மின் இணைப்புக் கொடுக்க இருக்கிறோம் என்று அறிவித்திருக்கிறது. ஆனால் அந்தக் குறியீட்டை எட்டுவதில்லை. எனவே, இப்படி அறிவிக்கப்படுகின்ற அந்தப் பாசனக் கிணறுகளுக்கு முழுமையாகவும் மின் இணைப்பு கொடுத்து விடுவார்களானால், இப்படிப்பட்ட சிறு விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கக்கூட தேவையில்லை; அப்படி மின் வாரியத்தால், அறிவிக்கப்படுகின்ற அந்தக் குறியீட்டளவையாவது எட்டுவதற்கு, மின்சார வாரியம் விரைவான நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயலுவார்களா ?